Regd. No. M. 4593

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 27-4-1946 சித்திரைமீ 15உ { மலர் 29

## வி-ம-ர்-ச-ன-ம்

★

காந்தியார்:

"பிரிட்டிஷார் சுதந்திரம் கொடுத்துவிட்டு பயணம் சொல்லிக் கொண்டு போக வந்திருக்கிறார்கள்" "அவர்கள்மீது குறை கூறாதீர்கள்" "அவர்கள் மனம் புண்படும்படி பேசாதீர்கள்" என்பதோடு,

"குயிட் இந்தியா என்றால் பிரிட்டிஷார் வெளியே போகவேண்டுமென்பது அருத்தமல்ல. இங்கேயே நம்மோடு, நம்மை தங்களோடு சரிசமமாய் நடத்திக் கொண்டு இருக்கவேண்டும் என்பதுதான் அஹிம்சை தத்துவப்படி சத்தியப்படி அருத்தமாகும்" என்கிறார்.

ஆனால் பார்லிமெண்டு தூது கோஷ்டியின் சுயராஜ்யம் கொடுக்கும் தன்மை (வாய்தா) எப்படிப் பட்டது என்றால்,

அலக்சாண்டர் சொல்லுவது,

இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுப்பது என்னும் "இந்திய அரசியல் பிரச்சினை தீர எதிர்பார்த்ததைவிட இன்னும் அதிக காலமாகும்" உடனடியாக முடியாது என்பதாகும்.

ஆகஸ்ட் 8ல் காந்தியார்:

"குயிட் இந்தியா ஏற்படுவதால் இந்த நாட்டில் அராஜம், கொள்ளைக்காரர், குண்டர்கள் ஆட்சி நடந்தாலும் சரி, உடனே வெள்ளையன் வெளியேற வேண்டும்" என்றார்.

1946 ஏப்ரலில்:

"சுயராஜ்யம் கொடுத்துவிட்டு பயணம்சொல்லிக்கொண்டு வெளியேற வந்திருக்கும் வெள்ளையர்" சொல்லுவதாவது: சுயராஜ்ஜியம் கொடுக்கும் மாதிரி என்னவென்றால்,

இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்க (உடனடியாகக் கிடைக்க அல்ல, எப்போதோ ஒரு காலத்துக்குக் கிடைக்க) எங்களால் ஆனதைச் செய்ய தூதுகோஷ்டி, வந்திருக்கிறோம் ஆனால் அந்த சுதந்திரம் நாங்கள் கொடுப்பதில் முதலாவது எங்களுக்கு கவுரவக் குறைவு இருக்கக்கூடாது (அதாவது பயந்துகொண்டு கொடுத்துவிட்டோம் என்றோ கொஞ்சம் கூட மீந்து வைத்துக்கொள்ளாமல் அடியோடு கொடுத்துவிட்டு ஓடி வந்துவிட்டோம் என்றோ எங்கள் நாட்டார் நினைக்கும்படி இருக்கக் கூடாது)

இரண்டாவது: சுதந்திரம் கொடுத்து நாங்கள் இந்தியாவை விட்டுப் போனபின் உள்நாட்டுக் கலகமும், நீங்கள் ஜாதிமத காரணமாய் ஒருவருக்கொருவர் மண்டை உடைத்துக் கொள்ளும் குண்டர்கள் தன்மையும் இருக்கக்கூடாதபடி பார்த்துத்தான் கொடுப்போம்.

மூன்றாவதாக நாங்கள் போய் விட்டபிறகு வேறு ஒரு நாட்டான் இங்கு வந்து எங்கள் ஸ்தானத்தில் உட்கார்ந்துகொள்ளாமல் இருக்கும்படியும் பார்த்துத்தான் கொடுப்போம்.

என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே பிரிட்டிஷார் உடனடியாக சுதந்திரம் கொடுத்து காலிசெய்துவிட்டுப் போக வந்திருக்கிறார்கள் என்று காந்தியார் சொன்னதற்கு அருத்தம் இதுதானென்று பிரிட்டிஷார் சொல்லிவிட்டார்கள்.


இந்த அருத்தம் அவர்கள் இங்கு இந்து, முஸ்லீம், சீக்கிய, திராவிட, ஆதிதிராவிட மக்களிடமும், மற்ற பெரியோர்களிடமும் பேசியபின்பும் காங்கரஸ், காந்தி, மற்ற தலைவர்கள் யோக்கியதை அறிந்த பிறகும் தைரியம்கொண்டு விளக்கிய அருத்தமாக இருக்க வேண்டும்.

இதனாலேயே "இந்தப் பிரச்சினை தீர இன்னும் நாள் பிடிக்கும்" என்று சொல்லிவிட்டார்கள் எனத் தெரிகிறது.

காந்தியார் உடனே சுயராஜ்ஜியம் கிடைத்துவிடும் என்றாலும், காங்கரஸ் தலைவர்கள் அதுவர

### திராவிடர் கழகக் கொடி

கறுப்பு—மத்தியில்—சிவப்பு



வெண்மையாகவுள்ள வட்டபாகம் சிவப்பாக இருக்கவேண்டும்

கறுப்பு: திராவிடர் இழி நிலை
சிவப்பு: புரட்சியின் சின்னம்

இழிவைப்போக்க புரட்சிசெய்

இன்னும் 5-வருடமாவது பிடிக்கும் என்கின்ற தைரியத்தில்தான் மந்திரி பதவிகளுக்கு கலகம், கட்சிப் போராட்டம், கட்டுப்பாடு மீறுதல் ஆகியவை செய்துகொள்ளுகிறார்கள்.

சுயராஜ்ஜியச் சங்கதி இப்படி இருக்கட்டும்.

☆

இனி நம்நாட்டு சங்கதிபற்றி விமர்சனம் எழுதுவோம்.

காங்கரஸ் சர்வாதிகாரியான காந்தியார், காங்கரஸ்காரர்கள், ராஷ்டிரபதி முதல்கொண்டு குடித்துவிட்டு வந்து கூட்டத்தில் கலகம் செய்யும் தொண்டர்வரை காந்தி பக்தர்கள், கட்டுக்கு அடங்கி நடக்கும் மகா பதிவிரதர்கள் என்பது அவர்களது கருத்து.

ஆனால் காந்தியார் சொல்லுகிறார் ராஜாஜி மகா யோக்கியர், மகா புத்திசாலி, மகா தியாகி. சென்னை மாகாண மக்களின் அன்பையும் நம்பிக்கையையும்பெற்றவர், அவரே மாகாண தலைமைக்கு, முதல் மந்திரி பதவிக்கு தகுதி உள்ளவர். அவருக்கு எதிர்ப்பாய் உள்ளவர்கள் ஒரு சிறு கோஷ்டி A Small gang என்கிறார். சற்றேறக்குறைய இதை காங்கரஸ் தலைவர் ராஷ்டிரபதியும், பார்லிமெண்டரி பிரசிடெண்ட் சர்தாரும் ஒப்புக்கொண்டு மேலொப்பமிட்டு விட்டார்கள். இந்த "கோஷ்டி" என்கின்ற "அவமானகரமான" வார்த்தையைப் பற்றி காமராஜர் வெட்கப்பட்டு, வேதனைப்பட்டு வேலையை இராஜினாமா கொடுத்தும்,

"நான் சொன்னது சரி அதை திருப்பியும் சொல்லுகிறேன்; இராஜினாமாவை வாங்கிக்கொள். இஷ்டப்பட்டால் என்னைப் பின்பற்று (என் தலைமையை ஏற்றுக்கொள்) இல்லாவிட்டால் ஏற்றுக்கொள்ளாதே (வெளியே போ) என்று காந்தியார் சொல்லிவிட்டார்.

அப்படிச் சொல்லியும் காமராஜர் வெளியேறாமல், காந்தியார் சொல்லையும் தலைமையையும் ஏற்றுக்கொண்டு காங்கரஸ்காரராய் இருப்பதாய் பாவனைகாட்டிக் கொண்டு ஆச்சாரியாரின் குணத்தில், நாணயத்தில், தேசபக்தியில், வெறுப்பும் கொண்டவராகி காந்தியார் கட்டளையையும், மேலிடத்து மற்ற காங்கரஸ் தலைவர்கள் கட்டளைகளையும், விருப்பங்களையும் அலட்சியம்செய்து வேறு நபர்களை தெரிந்தெடுக்க துணிவு கொண்டுவிட்டார்.

அவ்வளவுதானா இதன் விமர்சனம் என்று பார்த்தால், காந்தியார் வேண்டும் என்று சொன்ன ஆச்சாரியாரை சென்னையார் விலக்கினார்கள் என்பதோடு மாத்திரம் அல்லாமல் அவர் வேண்டாம் என்று சொன்னவரையே தேடி எடுத்தார்கள்.

☆

இதற்கு சென்னை காங்கரசார் சொல்லும் சமாதானம் என்ன என்றால் "உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்" என்று மேலிடத்து அனுமதி கிடைத்ததாக சொல்லுகிறார்கள்.

இதற்கு மேலிடத்தார் செய்யும் வியாக்கியானம் என்னவென்றால் "உங்கள் பொருப்பில் உங்கள் இஷ்டப்படி நடவுங்கள்' என்று தான் சொன்னோமே ஒழிய எங்கள் பொருப்பில் உங்களை எங்கள் இஷ்டத்திற்கு விரோதமாக உங்கள் இஷ்டப்படிநடவுங்கள் என்று சொல்லவில்லை" என்கிறார்கள்.

☆

நடந்தது என்னவென்றால் மேலிடத்து உத்திரவுப்படி நடத்துவதாக நடித்து மேலிடத்தின் முகத்தில் கரி பூசியதாகும். காந்தியாருடைய தலைமைக்கு இந்த மாதிரியாக இது இரண்டாவது மண்டை அடியாகும். அதாவது:

1. சுபாஷ் வெற்றியும், பட்டாபி தோல்வியுமாகும். காந்தியார் "கண்டிப்பாக சுபாஷை காங்கரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கக் கூடாது. பட்டாபி அவர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும்" என்றார். பட்டாபி தோற்றார், சுபாஷ் சுபாஷ் வெற்றிபெற்றார்.

பிறகு சுபாஷை காந்தியாரும், காங்கரசாரும் ஒழித்தேவிட்டார்கள் என்பது ஒருபுறமிருந்தாலும் இதில் காந்தியார் தோற்றார் என்பது காந்தியாரே 'நான் தோற்றேன்' என்று சொன்னார். இது மக்களுக்கு சுபாஷ்மீது வெறுப்பும் விரோதமும் ஏற்படக் காந்தியார் உண்மையில் தோற்றதையேதான் அந்த வெறுப்புணர்ச்சி ஏற்படுத்த பயன் படுத்திக்கொண்டார்.

இரண்டாவது தோல்வி ஆச்சாரியார் தோற்றதும், பிரகாசம் காரு வெற்றிபெற்றதுமாகும்.

வெற்றி பிரகாசத்தை நாளைக்கு இவர்கள் சுபாஷைப்போலவே செய்துவிடுவதானாலும் காந்தியாருக்கு இது இரண்டாவது அடி. இதுதான் காங்கரஸ் கட்டுப்பாடு.

☆

அடுத்தாப்போல் தேசியப் பத்திரிக்கைகள் காந்திபேரால் வயிறு வளர்க்கும் பத்திரிகைகளுக்கு விமர்சனம்.

பாரததேவி பத்திரிகை தனது 26ந்தேதி தலையங்கத்தில்சொல்லுகிறது.

எங்களுக்கும் இராஜகோபாலாச்சாரிக்கும் விரோதம், அவநம்பிக்கை வந்ததற்குகாரணம்(ஈ.வெ. ராமசாமியோடு சேர்ந்துகொண்டு இரகசியம் பேசிக்கொண்டு) நான் சொல்லுவதை கேட்காவிட்டால்,

"சென்னை இந்தியாவிலிருந்து கத்தரிக்கப்பட்டு விடும் என்று எங்களை மிரட்டியதால் அவரிடம் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது"

என்று 26ந்தேதி தலையங்கம் 51முதல் 56வது வரிகளில் எழுதி இருக்கிறது. இப்படியாக ராஜகோபாலாச்சாரியார் பயமுறுத்தலுக்கு பயந்து, ராஜகோபாலாச்சாரியாரை வெறுத்து மேலிடத்தை எதிர்த்துநின்ற வீரப்பத்திரிகையாகிய "பாரததேவி"

அதே தேதி, அதே தலையங்கம் அதே 56வது வரிக்கு கீழ் என்ன எழுதி இருக்கிறது என்றால், ஆச்சாரியார் மிரட்டியதைப்போல் "பாரததேவி" மிரட்டுவதற்காக அல்லாமல் நிஜமாகவும் கத்தரித்துக்கொள்ளப் போவதாகவே எழுதி இருக்கிறது. இது உண்மையோ அல்லது பித்தலாட்டமோ என்பது ஒருபுறமிருந்தாலும் சங்கதி அதுவேதான்.

அதாவது,

"காரியக்கமிட்டியார் (மேலிடத்தார் இந்தியாவிலிருந்து) சென்னையை கத்தரிக்கும் முறையில் நடந்துகொள்ளுகிறார்கள்" என்று எழுதி இருக்கிறது.

—(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மாணவர் பயிற்சி

15-4-46 முதல் 24-4-46 வரை, முதல்பிரிவு மாணவர்களுக்குப் பயிற்சி நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் மாவட்டங்களுக்குப் பிரசாரத்திற்கு 25-4-46 முதல் அனுப்பப்பட்டனர்.

இரண்டாவது பிரிவு மாணவர்களுக்கு அழைப்பு அனுப்பியதில் சிலரே வந்துள்ளனர். பெரியார் அவர்கள் எதிர்பாராத சில முக்கிய அலுவல்களைக் கவனிக்க சென்னை சென்றுவிட்டதால் இவர்களுக்குப் பயிற்சி 30-4-46க்குள் முடிவு பெறும்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக்கழகம்,
கச்சேரிவீதி, ஈரோடு.

## மாணவர் சுற்றுப்பிரயாணம்

### தஞ்சை மாவட்டம்

புலவர் ஆறுமுகம், புலவர் குழந்தையா, ஈரோடு சுப்பையன், தில்லை வில்லாளன் காஞ்சி வெங்கட்ராமன் ஆகியோர்.

28-4-46 தஞ்சை

29— கர்ந்தை

30— ஐயம்பேட்டை

1-5-46 தாராசுரம்

2— திருச்சிறை

3— குடவாசல்

4— நாச்சியார்கோவில்

5— சாக்கோட்டை

6— ஓய்வு

7— செம்பனார்கோவில்

8, 9, 10-மாயவரம் வட்டம்

மற்றவை பின்னர். கூட்டங்கள் நடத்த விரும்புகின்றவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவேண்டுகிறேன்.

வி எஸ். பி. யாகூப்,
C/o மகாதேவன், திராவிடர் கழகம்,
போளம்.

★

### சென்னை—செங்கற்பட்டு

தோழர்கள் மு. துரைராச், கி. தியாகராசன், இ. சு. கனகபாண்டியன், இரா. இராமானுசம் ஆகியோர்.

29-4-46 பெத்துநாயக்கன் பேட்டை சிவஞானம் பார்க்

30— சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பார்க்

1-5-46 திருவல்லிக்கேணி கடற்கரை

2— மவுண்ட்ரோட் எல்லிஸ் ரோட் அருகில்

3— தங்கம்பாக்கம்சேரி மைதானம் & மீனாட்சியம்மன் பேட்டை, இராயபுரம் (2 கூட்டங்கள்)

4— ஆலந்தூர் தர்மராசா கோயில் மைதானம் & சென்னை பிராட்வே சோமுலு நாயுடு பார்க் (2 கூட்டங்கள்

5— தியாகராய நகர்

6— கான்ரான்ஸ்மித் நகர் மைதானம் சூளை

7— மைலாப்பூர் கடற்கரை & தண்டையார்பேட்டை (2 கூட்டங்கள்)

8— புரசைவாக்கம் கிராமத் தெரு & வண்ணை செயராம் நாடார் மைதானம் (2கூட்டங்கள்)

9— பெரம்பூர் இரயில்வே ஸ்டேஷனுக்கெதிர் மைதானம்

10— பீபில்ஸ் பார்க் மைதானம்

முழு விவரங்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும். கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்குஎழுதுக.

என். வி. நடராசன்,
18, பெருமாள் முதலி தெரு,
பெத்துநாய்க்கன்பெட், சென்னை.

★

### வடஆற்காடு மாவட்டம்

வடஆற்காடு மாவட்ட திராவிடர் கழகத்தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமையுடன் தோழர்கள் க. திருமாறன், இரத்தினவேலன், வே. ரா. பூங்காவனம், க. நெடுஞ்சோழன் முதலியோர்.

28-4-46 திருப்பத்தூர்

29— ஜோலார்பேட்டை

30— நாட்டறம்பள்ளி

1-5-46 வாணியம்பாடி

2— ஓய்வு

3— வேலூர்

4— ஆரணி

5— செய்யாறு

6— போளூர்

மற்றவை பின்னர் அறிவிக்கப்படும், விவரங்களுக்கு வடஆற்காடு மாவட்ட அமைப்பாளர் தோழர் வி. எம் இராசமாணிக்கம், வியாபாரம், திருப்பத்தூர் வடஆற்காடு; என்ற முகவரிக்கு எழுதுங்கள். இயக்கத்தோழர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்.

★

### கோவை மாவட்டம்

தோழர்கள் இராவணன், இளஞ்சேரன், இளங்கண்ணன், பாலகுரு ஆகியோர்.

29— சத்தி

30— அவனாசி

1-5-46 கோவை

2— சிங்காநல்லூர்

3— இருகூர்

4— சூலூர்

5— குனியமுத்தூர்

6— புளியகுளம்

7— பாப்பநாய்க்கன்பாளையம்

8— செல்வபுரம்

9— கோவை சுக்கிரவாரப் பேட்டை

மற்றவை பின்னர். கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

என். இ. பாலகுரு,
பட்டக்காரர் பங்களா, ஈரோடு.

★

### திருநெல்வேலி மாவட்டம்

தோழர்கள் கே. என். தமிழரசன், முகம்மது மீரா, இரெ. இளம்வழுதி, இமயவரம்பன் ஆகியோர்.

28-4-46 தூத்துக்குடி

29— எட்டயாபுரம்

30— கோவில்பட்டி [?] 

1-5-46 டி. அருணாசலபுரம்

2— ஈறாச்சி

3— குளத்தூர்

4— வேப்பலோடை

5— விளாத்திகுளம்

கூட்டங்கள் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

கே. வி. கே. சாமி,
62, விக்டோரியா ரோடு, தூத்துக்குடி.

★

### மதுரை மாவட்டம்

தோழர்கள் எஸ். அப்பாவு, ஆர். செல்வன் B Sc., இரா. இளங்கோவன், நன்மாறன் ஆகியோர்.

26-4-46 மதுரை-அழகாடி

27— சந்தைப்பேட்டை

28— கிருஷ்ணராயர் தெப்பக்குள மைதானம்

கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

சி. முத்திருளாண்டி,
55 D புட்டுத்தோப்புரோடு, மதுரை.

★

### சேலம் மாவட்டம்

தோழர்கள் என். துரைராசன், இளங்கோவன், எஸ். வேல்சாமி, அபிபுல்லா ஆகியோர்.

27-4-46 வாகூர்

28— நாமக்கல்

29— வேலூர்

அடுத்து சேலம் பகுதியில் நடைபெற ஏற்பாடாகிறது.

★

### திருச்சி மாவட்டம்

தோழர்கள் சென்னை செம்பியன், பி. சக்ரநாதன், எம். வடிவேலு ஆகியோர்.

27-4-46 பொன்மலை

28— சீரங்கம்

29— லால்குடி

30— மணக்கால்

1-5-46 திருமங்கலம்
2— பிச்சாண்டார் கோயில்
3— மணச்சநல்லூர்
4— துறையூர்
5— சிறுகனூர்
6— ஒய்பு
7— குளித்தலை
8— கரூர்
9— திருவளர்சோலை
10— கல்கண்டார் கோட்டை

ஆங்காங்குள்ள தோழர்களும் திராவிடர் கழகங்களும் ஆதரவு தருவதோடு மேலும் கூட்டம் நடத்த விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

ஆர். சுலைமான், அமைப்பாளர்,
திராவிடர் கழகம், பாக்குப்பேட்டை,
உறையூர் போஸ்டு, திருச்சி.

☆

## இராமநாதபுரம் மாவட்டம்

தோழர்கள் கே. ஆர். பாண்டியன், சி. செங்குட்டுவன், பி. எஸ். முத்தையன் புலவர் குஞ்சிதபாதன் ஆகியோர் -

26-4-46 முதல் அருப்புக்கோட்டையில் தொடங்கி, 5-5-46ல் சாத்தூரில் முடிவுபெறும். பிற இடங்களின் விவரம் அடுத்த இதழில் வரும். கூட்டம் நடத்த விரும்புவோர் கீழுள்ள முகவரிக்கு எழுதுக.

எஸ். எஸ். கருப்பையா,
திராவிடர் கழகம், அருப்புக்கோட்டை.

☆

## தென்னாற்காடு மாவட்டம்

சிதம்பரம் வட்டத்தில் கூட்டங்கள் நடத்த புலவர் மாணிக்கம் அவர்கள் முயற்சி செய்கிறார்கள். பிற இடங்களிலுள்ள தோழர்களும் கூட்டங்களை நடத்தி விரைவில் ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன்.

ஆ. திராவிடமணி.

---

## தோழர் B. கங்காதரன் மறைவு

### தோழர் C. D. T. அரசு அறிக்கை

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பிறந்தநாள் விழா ஊர்வலத்தின்பொழுது அகரத்தில் காங்கரஸ்காரர்களால் தாக்குண்டு உயிர்நீத்த தோழர் B. கங்காதரன் அவர்களின் உறவினருக்கு சென்னை ஜில்லா திராவிடர் கழகத்தின் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் இவ்வித காலித்தன அட்டூழியச் செயலில் இறங்கியுள்ள காங்கரசின் அநீதிச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று சென்னை ஜில்லா திராவிடர் கழகத் தலைவர் தோழர் C. D. T. அரசு எழுதுகிறார்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இது அதேதலையங்கம் 59, 60, 61, 62, வரிகளாகும்)

ஆகவே சென்னை மாகாணத்தில் தமிழ்நாட்டில் ஆச்சாரியார் கோஷ்டியும், ஆந்திரத்தில் பிரகாசம்காரும், பிரகாசம் கோஷ்டியும் இந்தியாவிலிருந்து சென்னை மாகாணம் (தமிழ்நாடு, ஆந்திரநாடு) கத்தரிக்கப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும் என்று, மேலிடத்தாரை பயப்படுத்தத்தக்க நிலைக்கு வந்துவிட்டார்கள்.

☆

இதிலிருந்து அந்தக் காரணத்துக்குஆக ஆச்சாரியாரை மற்றவர்கள் வெறுத்தார்களானால், இந்தக் காரணத்துக்குஆக பிரகாசம்காரு கோஷ்டியையும் மீதிஉள்ளவர்கள் வெறுக்கவேண்டியது அவசியமாகும். அல்லது இருவரும் சேர்ந்தாவது கத்தரிக்கோல்தேடி சென்னையை கத்தரிக்கவேண்டியது நாணயமாகும்.

இன்று இந்த அளவு போதும்.

---

## தில்லை இளங்கோ மன்ற 6வது ஆண்டு நிறைவு விழா

இம்மன்றத்தின் 6வது ஆண்டு நிறைவு விழா 14-4-46ம் நாள் ஞாயிறன்று சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமி அவர்கள் தலைமையில் சிதம்பரம் இராமசாமி செட்டியார் நகர உயர்நிலைப்பள்ளி வெளியிலமைத்திருந்த முத்தையா மண்டபத்தில் நிகழ்ந்தது.

மாலை 4½ மணியளவில் மேலவீதியிலிருந்து ஊர்வலமாகி மேளவாத்திய முழங்கப் பந்தலை யடைந்தது. ஆயிரக்கணக்கில் உள்ளூர் வெளியூர்த் தோழர்கள் குழுமியிருந்தனர். இன்னிசைக்குப் பின் மன்றத் தலைவர் அனைவரையும் வரவேற்றுப்பேச நீண்ட கைதட்டலுக்கிடையே தலைவர் மேடையிலமர்ந்தார். விழா மண்டபத்தின் தலைவர் சொற்பொழிவாளர்களுக்கு மாலையணியாமல் அன்பளிப்பாக புத்தகங்கள் கொடுக்கப்பெற்று அதன்கருத்தைப் புலவர் மாணிக்கம் விளக்கிப் பேசினார். செயலாளர் ஆண்டு அறிக்கை படிக்கத் தலைவர் பாட்டுப்போட்டி, பேச்சுப்போட்டிகளில் பரிசுபெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசு வழங்கினார். தலைவர் முன்னுரையில் வடநாட்டு மோகம், தற்காலத் தமிழன் நிலை, இந்தி மீண்டும் வருமாயின் தாம் சிறைசெல்லல் மற்றைப் புலவர்களும் அதற்குத் தயாராதல் என்பனவற்றைச் சிறப்பாக விளக்கினார். அறிஞர் அ. சிதம்பரநாதனார் ஆராய்ச்சிகளோடு சிலப்பதிகாரம் இடைப்பட்ட காலத்து இலக்கியமென்றும், புலவர் திருவத்திபுரம் கே. கோவிந்தன் அவர்கள் இன்பத்தமிழ் இன்றும் இலக்கியமும் என்றும் எ. பி. சனார்த்தனம் அவர்கள் இளைஞர் உள்ளம் என்ற தலைப்பிலும் பேசினார்கள். இரவு 9½ மணியளவில் நன்றிகூறலுடன் விழா முடிந்தது.

## மாநாடு வரவு செலவு

17-3-46ல் நடைபெற்ற சென்னை 2-வது சர்க்கிள் திராவிட மாநாட்டு மொத்த வரவு ரூ. 358-4-0, செலவு ரூ. 333-14-6, மீதி இருப்பு ரூ. 24-5-6 எனச் செயலாளர் தோழர் கே.கோவிந்தசாமி அறிவிக்கிறார்.

31-3-46ல் நடைபெற்ற நாகை வெளிப்பாளையம் மணி பகுத்தறிவு கழக 2வது ஆண்டுவிழா வரவு ரூ. 563-4-0 செலவு ரூ. 342-11-0 நிகர இருப்பு ரூ. 220-9-0. பொருளாளர் கே. பாப்பையா அவர்களிடம் உள்ளதென செயலாளர் பி. சண்முகம் தெரிவிக்கிறார்.

25-8-46ல் நடைபெற்ற ஈரோடு தாலுக்கா முதலாவது மருத்துவர் மாநாட்டு வரவு ரூ. 916-11-1 செலவு ரூ. 596-13-3 இருப்பு ரூ. 319-13-10 என செயலாளர் ஈ. கே. கருப்பையா அறிவிக்கிறார்.

## பிறப்பு

சேலம் செவ்வாய்ப்பேட்டை தோழர் எ. எஸ். முனுசாமியின் வாழ்க்கைத் துணைவி பட்டம்மாளுக்கு 1-4-46ல் பெண்குழந்தை பிறந்து "திராவிடமணி" எனப் பெயர் சூட்டப்பட்டது. குடி அரசு வளர்ச்சிக்கு ரூபா ஒன்று அளிக்கப்பட்டது.

## மறைவு

7-4-46ல் தூத்துக்குடி பெரியார் திராவிட இளைஞர் கழக துணைத் தலைவர் தோழர் க. பேச்சிமுத்து அவர்களின் அன்னையார் இயற்கையெய்தினார்: சடங்குகளின்றி உடல் அடக்கம் செய்யப்பட்டது. குடி அரசுக்கு ரூபா ஒன்று நன்கொடை அளிக்கப்பட்டது.

மதுரை கீழ வெளித்தெரு தன்மதிப்பியகத்தோழர் பெ. சு. பெரியசாமி அவர்கள் சிலநாள் காய்ச்சலாக இருந்து 8-4-46ல் இயற்கையெய்தினார். மதுரை மாவட்ட திராவிடர் கழகத்தார் தமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

Edited, Printed, and Published by N. Kariveradaswamy at the (Tamilian Press 42, Cutchery street, ERODE.